O.S. 97/17 தேதி. 02.09.2024

Name. செந்தில் குமார் (வா.சா.2)

**வா.சா. 2 ன் குறுக்கு விசாரணை (1ம் பிரதிவாதி தரப்பில்)**

நான் ஆறுமுகம் ஆ கியோர்கள் ஒரே ஊரைச் சார்ந்தவர்கள். 1ம் பிரதிவாதி ஆலமரத்துப்பட்டியை சார்ந்தவர். ஆறுமுகத்தை எனக்கு சிறுவயதில் இருந்தே எனக்கு தெரியும். 1ம் பிரதிவாதி 40 வருடங்களுக்கு முன்பாக சேலத்தில் செட்டில் ஆகிவிட்டார் என்றால் சரிதான். அவ்வப்போது ஊருக்கு வந்து செல்வார். பிச்சம்பட்டி சுற்றி 1ம் பிரதிவாதி நிலம் வாங்கி விற்கும் தொழில் செய்கிறார் என்றால் சரிதான். அவர் சேலத்தில் குடியிருந்து வந்ததால் ஆறுமுகம் தான் 1ம் பிரதிவாதி இடம் வாங்கி கொடுத்து விற்பனை செய்து வந்தார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி பெயரிலான சொத்துக்களுக்கு ஆறுமுகம் தான் பட்டா மாற்றி கொடுப்பார் என்றால் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி பக்கவாத நோயால் பாதிகப்பட்டு இருந்தார் என்று சொன்னால் சரிதான். ஆனால் அவ்வப்போது ஊருக்கு வந்து செல்வார். அவர் 2 வருடங்கள் வீட்டோடு பாதிக்கப்பட்டு இருந்தார் என்று சொன்னால் எனக்கு தெரியாது. நானும் ஆறுமுகமும் நிலம் வாங்கும் புரோக்கர் தொழில் செய்து வருகிறோம் என்றால் இந்த இடத்திற்கு மட்டும் தான் சேல் செய்தோம். இது தவிர வேறு எந்த கிரைய ஒப்பந்தத்திலும் நான் கையொப்பம் செய்யவில்லை. நான் விவசாயம் மற்றும் நில புரோக்கர் தொழில் செய்து வருகிறேன். சில நேரங்களில் பட்டா மாற்றம் செய்வதற்கு பத்திரம் மற்றும் பச்சை தாளில் உறுதிமொழியாக தாக்கல் செய்வது வழக்கம் என்று சொன்னால் எனக்கு தெரியாது. தாவா சொத்து கிரையம் ஒப்பந்தம் சம்மந்தமாக என்னை கையொப்பம் செய்ய ஆறுமுகம் தான் வரச்சொன்னார். கிரைய ஒப்பந்தத்தை நான் படித்து பார்த்தேன். தாவா சொத்து கிரையம் சம்மந்தமாக 01.12.2014 பேசப்பட்டது. தாவா சொத்தை விற்பதாக 1ம் பிரதிவாதி ஆறுமுகத்திடம் சொல்லியிருந்தார். ஆறுமுகம் வாதியிடம் சொல்லி தான் கிரையம் பேசப்பட்டது. ஆறுமுகம் தான் வாதியை வரச்சொல்லி இருந்தார்

என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தம் பேசும் போது ஆறுமும், சசிக்குமார், மாணிக்கம் ஆகிய 3 பேர் இருந்தார்கள். கிரையம் ஒப்பந்தம் எங்கு வைத்து பேசப்பட்டது என்றால் வெள்ளியணை மாரியம்மன் கோவிலுக்கு அருகில் வைத்து பேசப்பட்டது. அப்போது கிரையம் ஒப்பந்தம் போடலாம் என்று பேசப்பட்டது. கிரைய ஒப்பந்தம் மாரியம்மன் கோவில் அருகே மரத்தடியில் வைத்து போடப்பட்டது. கிரைய ஒப்பந்தத்தை ஏற்கனவே மாணிக்கம் தயாராக அடித்து கொண்டு வந்திருந்தார். கிரைய ஒப்பந்தத்திற்கான முத்திரை தாள், பச்சை தாள் ஆகியவற்றை மாணிக்கமே தயார் செய்து கொண்டு வந்தார் என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தத்தை கொடுத்துவிட்டு பணத்தை வாங்கி கொண்டு மாணிக்கம் 3 பக்கங்களில் கையொப்பம் செய்தார். நான் ஆறுமுகம், மாணிக்கம், சசிக்கமார் ஆகிய 4 பேரும் ஒன்றாகத்தான் கரூரிலிருந்த கிளம்பி வெள்ளியணை மாரியம்மன் கோவிலுக்கு அருகே வந்தோம். நானும் ஆறுமுகமும் கரூருக்கு வந்தோம். நானும் மாணிக்கமும் சேலத்திலிருந்து வந்தார். வெள்ளியணையில் பத்திர அலுவலகமும், பத்திர எழுத்தர் அலுவலகமும் உள்ளது. கிரைய ஒப்பந்தத்தை பத்திர எழுத்தர் அலுவலகத்தில் வைத்து எழுதவேண்டும் என்று நாங்கள் நினைக்கவில்லை. நாங்கள் சென்றவுடன் வாதி அங்கு வந்தார். அப்போது பத்திரம் ரெடி பண்ணி வந்ததாக சொன்னவுடன் பணத்தை கொடுத்துவிட்டு, ஒப்பந்தத்தை வாங்கி கொண்டு சென்றுவிட்டாரா என்றுகேட்டால் நாங்கள் கையொப்பம் செய்தோம். முதல் சாட்சி ஆறுமுகம், 2வதாக சசிக்கமார் 3வதாக நான் சாட்சி கையொப்பம் செய்தேன். பின்பு வாதி கிரைய ஒப்பந்தத்தை வாங்கி கொண்டு சென்று விட்டார். வேறு யாரும் கையொப்பம் செய்யவில்லை. தாவா சொத்தின் மதிப்பு கிரைய ஒப்பந்த காலத்தில் 6 முதல் 7 லட்சம் வரை சென்றது. என்னை சாட்சி கையெப்பம் செய்ய ஆறுமுகம் தான் வரச்சொன்னார். யார் வரச்சொன்னார்கள் என்று எனக்கு தெரியாது. நான் பொய்யான விவரங்களை குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு ஆறுமுகம் நிலம் வாங்கி கொடுக்கும் புரோக்கராக இருந்து வந்தார் என்றும், அந்த நிலங்களுக்கு பட்டா மாற்றுவதற்காக வெற்று பத்திரம் மற்றும் பச்சை பேப்பரில் கையொப்பம் செய்து கொடுத்து வைத்திருந்தார் என்றும், அந்த பத்திரங்கள் மற்றும் பச்சை

பேப்பர்களை 1ம் பிரதிவாதிக்கு உடல்நிலை சரியில்லாததை பயன்படுத்தி, 1ம் பிரதிவாதிக்கு யார் என்று தெரியாத வாதியின் பெயருக்கு பொய்யான வாதியின் பெயருக்கு ஆறுமுகம், நான், சசிக்குமார் ஆகியோர்கள் ஏற்படுத்திக்கொடுத்தோம் என்றால் சரியல்ல. பொய்யான கிரய ஒப்பந்தம் என்றும், நான் சொல்வது போல் எந்த காலத்திலும் வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தம் போடப்படவில்லை என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.
ஒ/ம். சண்முகவேல்ராஜ்,
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.

O.S. 97/17 தேதி. 02.09.2024

Name. சந்தோஷ் (வா.சா.1)

<u>வா.சா. 1 ன் குறுக்கு விசாரணை (1ம் பிரதிவாதி தரப்பில்)</u>

எனது சொந்த ஊர் திண்டுக்கல் மாவட்டம். வழக்கு சொத்து கரூர் மாவட்டம், கே. பிச்சம்பட்டி கிராமம் என்றால் சரிதான். நான் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கரூர் மாவட்டத்தில் எனக்கு வேறு சொத்துக்கள் இல்லை. தோகைமலையை சார்ந்த சண்முகம் என்பவர் தாவா சொத்துக்கள் விற்கப்போவதாக என்னிடம் கூறினார். பிச்சம்பட்டியை சார்ந்த சாட்சி கையொப்பம் செய்த செந்தில் என்பவர் தாவா சொத்து விற்கப்போவதாக கூறினார். கிரையம் ஒப்பந்தம் சம்மந்தமாக கே.பிச்சம்பட்டியில் வைத்து பேசப்பட்டது. கிரைய ஒப்பந்தத்திற்கு முன்பாக 1ம் பிரதிவாதியை எனக்கு யார் என்று தெரியாது. 01.12.2014 அன்று 1ம் பிரதிவாதி கூறியதன் அடிப்படையில் செந்தில் மூலமாக கிரையம் ஒப்பந்தம் பற்றி பேசப்பட்டது. 1ம் பிரதிவாதி தரப்பில் ஆறுமுகமும், மாணிக்கமும், என்னுடைய தரப்பில் செந்திலும், சண்முகமும் நான் மற்றும் 1ம் பிரதிவாதி ஆகியோர்கள் இருந்தோம். ஆறுமுகமும், 1ம் பிரதிவாதியும் நண்பர்கள் என்றால் சரிதான், (சாட்சி தற்போது இருவரும் ஒரே ஊரைச் சார்ந்தவர்கள் என்பதால் நண்பர்களாக இருக்கலாம் என்று கூறினேன். ) ஆறுமுகமும், 1ம் பிரதிவாதியும் பல சொத்துக்களை வாங்கி விற்பனை செய்துள்ளார் என்று அவர்கள் அப்படி தான் கூறுகிறார்கள் எனக்கு தெரியாது. ஆறுமுகம் நில புரோக்கர் என்றால் சரிதான். தாவா கிரையம் ஒப்பந்தம் சம்மந்தமாக எப்போது இறுதி செய்யப்பட்டது என்று கேட்டால் தாவா சொத்தை சுற்றி பார்த்த பின்பு செந்தில் 1ம் பிரதிவாதி சொத்து தான் என்றும், நம்பி வாங்கலாம் என்றும், முன் தொகை கொடுக்கலாம் என்று என் தரப்பில் சொன்னார் அவர்கள் தரப்பில் ஆறுமுகமும், மாணிக்கமும் சொன்னார்கள். அன்றைய தினம் நான் முன்பணம் கொடுக்கவில்லை 04.12.2014 அன்று ரூ. 4 லட்சத்து ஓராயிரம் நான் முன்பணமாக கொடுத்தேன். 1ம் தேதியும் முன்பணம்

கொடுத்த அன்றும் அசல் ஆவணத்தை பார்க்கவில்லை. வங்கியில் கடன் பெற்றிருப்பதாகவும் அதை சரி செய்துவிட்டு அசல் ஆவணத்தை காண்பிப்பதாக கூறினார். முன் பணம் கொடுத்ததற்காக ஒரு ஒப்பந்தம் போடப்பட்டது. அந்த ஒப்பந்தத்தை ஆறுமுகம், மாணிக்கம் வந்தார்கள். வரும் போதே ஆவணத்தை தயார் செய்து கொண்டு வந்தார்கள். கிரைய ஒப்பந்தம் எங்கு, எப்போது, யாரால் தயார் செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது. அந்த ஆவணத்தை கொண்டு வந்தார்கள். முன்பணத்தை நான் கொடுத்தேன். சாட்சி கையொப்பம் செய்தார்கள். அந்த கிரைய ஒப்பந்தத்தை என்னிடம் கொடுத்துவிட்டு சென்று விட்டார்கள். கிரைய ஒப்பந்ததில் யார் யார் சாட்சி கையெழுத்து செய்தார்கள் என்று நான் கூறவில்லை. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரம் எனக்கு தெரியும். கிரையத் தொகை 1 ஏக்கர் 7 லட்சத்திற்கு பேசப்பட்டது. கிரைய ஒப்பந்தம் பதிவு செய்தவற்காக காரணம் என்னவென்றால் 60 நாட்களுக்குள் கிரையம் முடிக்கப்படும் என்பதால் பதிவு செய்யவில்லை. கிரைய ஒப்பந்தத்தில் மாணிக்கம் வங்கியில் கடன் பெற்றிருப்பதற்கான காரணம் எழுதப்படவில்லை. அந்த 60 நாட்களுக்குள் கிரையம் மீதத் தொகை தயாராக இருப்பதாகவும், கிரையம் செய்து கொள்வோம் என்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்று கேட்டால் அலைபேசி மூலம் செந்தில், சண்முகம், ஆறுமுகம் ஆகியோர்களுக்கு தகவல் சொன்னேன். வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை. 60 நாட்கள் கழித்தும் எழுத்து மூலமான அறிவிப்பு எதுவும் பிரதிவாதிக்கு கொடுக்கவில்லை. வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லியுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அந்த வழக்கறிஞர் அறிவிப்பில் கிரைய தொகை 7 லட்சம் என்றும், 4 லட்சத்து ஆயிரம் முன்பணமாக கொடுக்கப்பட்டது என்றும், கிரையம் செய்து கொடுக்க வேண்டும் என்று தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் பிறகு சீர்திருத்த வழக்கறிஞர் அறிவிப்பும் நான் கொடுக்கவில்லை. 2வது சாட்சி கையெழுத்து செய்த சசிக்குமார் எனக்கு யார் என்று தெரியாது. ஆறுமுகத்தை எனக்கு தெரியாது. ஆறுமுகமும், மாணிக்கமும் ஒரே ஊரை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். நீண்டகால நண்பர்கள் என்றால் தெரியாது. கிரையம் ஒப்பந்தம் போடப்பட்ட காலத்தில் 1ம் பிரதிவாதி சேலத்தில் தான் குடியிருந்து வந்தார் என்றால் அங்கு தொழில் செய்வதாக சொன்னார்கள். அவர் 25 வருடங்களுக்கு

முன்பாகவே சேலத்தில் செட்டில் ஆகிவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. 2013 ம் ஆண்டிலிருந்து 2 வருடங்கள் அவர் பக்கவாதத்தின் காரணமாக வீட்டை விட்டு வெளியே வரவில்லை என்றால் சரியல்ல. அவர் வரும்போது கொஞ்சம் சரி இல்லாமல் தான் நடந்து வந்தார். நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஆறுமுகம் புரோக்கராக இருந்து மாணிக்கத்திற்கு நிலம் வாங்கி விற்று கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது.அப்போது மாணிக்கம் வெற்று பத்திரங்களில் மற்றும் பச்சை பேப்பரில் கையொப்பம் மட்டும் போட்டு கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.1 கிரைய ஒப்பந்தத்தில் தட்டச்சு பகுதிக்கும், 1ம் பிரதிவாதியின் கையொப்பத்திற்கும் இடையே அதிக இடைவெளி உள்ளதா என்றால் குறைவான இடைவெளி தான் உள்ளது. அவர் தான் தயார் செய்து வந்தார். கிரைய ஒப்பந்தத்திற்கான பத்திரம் யாரால் வாங்கப்பட்டது என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதி தன் பெயரில் கிரையம் வாங்கிய நிலங்களுக்கு பட்டா மாறுதல் செய்தவற்காக வெற்று பத்திரம் மற்றும் பச்சை தாளில் கையொப்பம் செய்து கொடுத்திருந்தார் என்றும், அதை நான் ஆறுமுகம், செந்தில் ஆகியோர்கள் சேர்ந்து கிரையம் ஒப்பந்தமாக மாற்றி எழுதி கொண்டோம் என்று சென்னால் சரியல்ல. வழக்கறிஞர் அறிவிபபுக்கு பின்பு தான் கியைம் ஒப்பந்தம் தயார் செய்யப்பட்டது என்றும், அதனால் தான் மொத்த சொத்தின் விற்பனை தொகை 7 லட்சம் என்று குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தத்தில் கண்ட தொகை ரொக்கமாக கொடுக்கப்பட்டது. காசோலையாகவோ. வங்கி வைரவோலையாகவோ கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். 14.07.2016 அன்று 1ம் பிரதிவாதி விற்றுவிட்டார் என்று சொன்னால் நான் அறிவிப்பு அனுப்பிய பின்பு தான் விற்றார். கிரையம் ஒப்பந்தம் போடப்பட்ட காலத்திலே சொத்தின் மதிப்பு ஏக்கருக்கு 20 லட்சத்திற்கு மேல் போகும் என்று சொன்னால் சரியல்ல. உண்மையாகவே கிரைய் ஒப்பந்தம் என்றால் தாவா சொத்து சம்மந்தப்பட்ட அடமான கடனை கண்டு கிரையம் ஒப்பந்தம் போடப்பட்டிருக்கும் என்று சொன்னால் சரியல்ல. அடமான கடன் எவ்வளவு என்று எனக்கு தெரியாது. கடன் வாங்கியுள்ளது என்று தான் சொன்னார். 1ம் பிரதிவாதி என்னை எந்த காலத்திலும் பார்த்தது இல்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா. 1 கிரைய ஒப்பந்தத்திற்கு எவ்வித மறுபயனும்

கிடையாது என்று சொன்னால் சரியல்ல. உண்மையான கிரையம் ஒப்பந்தம் என்றால் உரிய நேரத்தில் உடனடியாக கிரையம் செய்வதற்கும் தொகையை வசூல் செய்வதற்கும் நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றால் சரியல்ல.கிரைய ஒப்பந்தத்திற்கான வெள்ளியணை மாரியம்மன் கோவிலுக்கு முன்பாக நடைபெற்றது. வெள்ளியணை கிராமத்தில் பத்திர எழுத்தர் மற்றும் அலுவலகம் இருக்கிறது. பொய்யான கிரைய ஒப்பநத பத்திரம் என்பதால் தான் மாரியம்மன் கோவில் வைத்து எழுதப்பட்டது என்றால் சரியல்ல. மறுபயன் இல்லாத கிரைய ஒப்பந்தம் இல்லாததால் என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தத்தில் சாட்சி கையெழுத்து செய்த 3 நபர்களும் எனக்கு வேண்டப்பட்ட நபர்கள் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டதை பயன்படுத்தி மோசடியாக கிரைய ஒப்பந்தம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதனால் தான் ஆறுமுகம், சசிக்குமாரை நான் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. பொய்யான கிரையம் ஒப்பந்தம் என்பதால் தான் 1ம் பிரதிவாதி 2,3 பிரதிவாதிகளுக்கு தகுந்த மறுபயன் அடிப்படையில் கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. அதனால் நான் கேட்கும் பொறுப்பிடை பாத்தியம் கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

<u>3 முதல் 6 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

தாவா சொத்து 1ம் பிரதிவாதி 2 , 3 பிரதிவாதிகளுக்கு 14.07.2016 அன்று கிரையம் கொடுத்துவிட்டார் என்று சொன்னால் சரிதான். 2 , 3 பிரதிவாதிகள் நல்ல எண்ணத்தின் அடிப்படையில் கிரையம் பெற்ற பிரதிவாதிகள் என்றும், நானும் 1ம் பிரதிவாதியும் தாவா சொத்தை அபகரிப்பதற்காக தொகையை சட்ட விரோதமாக கைப்பற்றுவதற்காக கூட்டு சேர்ந்து இந்த வழக்கை தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கு 2 ,3 பிரதிவாதிகள் அவசியமற்ற தரப்பினர்கள் என்றும், இவ்வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. எனக்கும் 1ம் பிரவிதாதிக்கும் இடையே உள்ள கிரைய ஒப்பந்தம் பற்றி இந்த பிரதிவாதிகளுக்கு தெரியாது என்றும், வழக்கறிஞர் அறிவிப்பு பற்றி 1ம் பிரதிவாதி 2,3 பிரதிவாதிகளுக்கு எவ்வித தகவலும்

கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அதனால் இந்த சொத்தை பொருத்து 2,3 பிரதிவாதிகள் பொருத்து பாத்தியப்பட்ட தாவா சொத்தில் எவ்வித பொறுப்புறுதியும் கேட்கமுடியாது என்றும், அவ்வாறு கேட்வேண்டும் என்றால் 1 ம் பரிதிவாதக்கு பாத்தியப்பட்ட சொத்தில் பொறுப்புறுதி கேட்கவேண்டும் என்றும், 3 – 6 பிரதிவாதிகள் ஆதரவாக வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.
ஒ/ம். சண்முகவேல்ராஜ்,
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.